


admin@dhinakani.com
RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்




Vol: 03 | Issue: 83 | 4 Pages | 22.10.2025 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 03 | இதழ்: 83 | 4 பக்கங்கள் | 22.10.2025 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**செருக்குஞ் சினமுஞ் சிறுமையும் இல்லார்**
**பெருக்கம் பெருமித நீர்த்து**

**விளக்கம்:**
**செருக்கும் சினமும் காமமும் ஆகிய இந்தக் குற்றங்கள் இல்லாதவனுடைய வாழ்வில் காணும் பெருக்கம் மேம்பாடு உடையதாகும்.**

## ஜனாதிபதி கேரளா வருகை: சபரிமலையில் சாமி தரிசனம் செய்கிறார்

திருவனந்தபுரம், அக்.22

ஐப்பசி மாத பூஜையின் நிறைவு நாளான 22ந்தேதி(நாளை) ஜனாதிபதி திரவுபதி முர்மு சபரிமலையில் சாமி தரிசனம் செய்கிறார். இதையொட்டி அவர் 21ந்தேதி(இன்று) கேரள மாநிலத்தின் தலைநகர் திருவனந்தபுரத்திற்கு வருகை தருகிறார். இன்று இரவு கவர்னர் மாளிகையில் ஓய்வெடுக்கும் அவர் நாளை காலை 9 மணிக்கு திருவனந்தபுரத்தில் இருந்து ஹெலிகாப்டர் மூலம் நிலக்கல் வருகிறார்.

அங்கிருந்து கார் மூலம் பம்பை வரும் அவர் இருமுடி கட்டி தேவஸ்தானத்தின் சிறப்பு வாகனம் மூலம் சன்னிதானம் செல்கிறார். தொடர்ந்து பகல் 12.30 மணியளவில் சாமி தரிசனம் செய்துவிட்டு சன்னிதானத்தில் ஓய்வெடுக்கிறார். பின்னர் வாகனம் மூலம் நிலக்கல் வந்து அங்கிருந்து மீண்டும் ஹெலிகாப்டர் மூலம் திருவனந்தபுரம் வருகிறார்.

பின்னர் வர்க்கலாவில் நாராயண குரு ஆசிரமத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பங்கேற்ற பிறகு மீண்டும் திருவனந்தபுரம் திரும்புகிறார். தொடர்ந்து 24ந் தேதி வரை கேரளாவில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் அவர் பங்கேற்க உள்ளார்.

ஜனாதிபதி திரவுபதி முர்மு சபரிமலைக்கு வருவதையொட்டி வருகிற 21,22ந்தேதிகளில்பக்தர்களின்தரிசனத்திற்குதடைவிதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அந்த 2 நாட்களுக்கும் ஆன்லைன் முன்பதிவு ரத்து செய்யப்பட்டு உள்ளது. மேலும் பாதுகாப்பு உள்பட பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன.

## சிறுத்தை தாக்கி 3 பெண்கள் காயம்

உனா, அக்.22

இமாசலபிரதேச மாநிலம் உனா மாவட்டம் ஹரோலி துணை மண்டல வனப்பகுதி அருகே பால்க்வா கிராமம் அமைந்துள்ளது. நேற்று காலையில் இந்த கிராமத்தையொட்டி விளைநிலங்களில் ஏராளமான பெண்கள் வேலை செய்து கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த ஒரு சிறுத்தை, பெண்களை தாக்க முயன்றது. அதையடுத்து அவர்கள் சிதறி ஓடினர்.

அப்போது 3 பெண்களை விடாமல் துரத்திச் சென்ற சிறுத்தை அவர்களை கொடூரமாக தாக்கியது. இதில் ஒரு பெண்ணின் கண்ணில் படுகாயம் ஏற்பட்டது. மற்ற 2 பெண்களும் லேசான காயங்களுடன் தப்பினர். தற்போது 3 பெண்களும் அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள். அந்த சிறுத்தையை இரும்பு கூண்டு வைத்து பிடிக்க வனத்துறையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## தலைநகர் டெல்லியில் ஏற்பட்ட தீ விபத்துகள்; உதவி மையத்திற்கு 170க்கும் மேற்பட்ட அழைப்புகள் வந்ததாக தகவல்



புதுடெல்லி, அக்.22

நாடு முழுவதும் தீபாவளி பண்டிகை நேற்று வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. பொதுமக்கள் அதிகாலையிலேயே புத்தாடைகளை அணிந்து, இனிப்பு, பலகார வகைகளை அக்கம்பக்கத்தினருடன் பகிர்ந்து, கோவில்களுக்குச் சென்று பண்டிகையை கொண்டாடி மகிழ்ந்தனர். மேலும் விதவிதமான பட்டாசுகளை வெடித்து சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் உற்சாகமாக தீபாவளியை கொண்டாடினர்.

இதனிடையே பொதுமக்கள் பட்டாசுகளை வெடிக்கும்போது பாதுகாப்பான முறையில் வெடிக்க வேண்டும் என்றும், மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும் என்றும் தீயணைப்புத்துறையினர் அறிவுறுத்தினர். பட்டாசுகளை வெடிக்கும்போது தளர்வான பருத்தி ஆடைகளை அணிய வேண்டும், அருகில் மணல் அல்லது தண்ணீர் உள்ளிட்டவற்றை வைத்துக் கொள்ள வேண்டும் என்பன உள்ளிட்ட அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன.

இருப்பினும் பல்வேறு இடங்களில் எதிர்பாராத விதமாக தீ விபத்து சம்பவங்கள் அரங்கேறின. அந்த வகையில் தலைநகர் டெல்லியில் நேற்று இரவு 11.30 வரை,

தீ விபத்து சம்பவங்கள் தொடர்பாக தீயணைப்புத்துறையினருக்கு சுமார் 170க்கும் மேற்பட்ட அழைப்புகள் வந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. இதன்படி தீயணைப்பு வீரர்கள் சம்பந்தப்பட்ட அனைத்து இடங்களுக்கு விரைந்து சென்று தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். மேலும் காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

# காவலர் வீரவணக்க நாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் மரியாதை: 175 பேருக்கு கருணை அடிப்படையில் பணி



சென்னை, அக்.22

தமிழ்நாட்டில் ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 21ம் தேதி காவலர் வீரவணக்க நாள் அனுசரிக்கப்படுகிறது. கடந்த 1959ம் ஆண்டு லடாக் பகுதியில் சீனப்படைகள் நடத்திய திடீர் தாக்குதலில் 10 மத்திய ரிசர்வ் போலீஸ் படை வீரர்கள் கொல்லப்பட்டதை நினைவுகூரும் விதமாகவும், காவல்துறையில் பணியில் இருந்த போது உயிர் தியாகம் செய்த காவலர்களின் தியாகத்தை போற்றும் விதமாகவும் காவலர் வீரவணக்கநாள் அனுசரிக்கப்படுகிறது.

அதன்படி, சென்னை, காவல் துறை தலைமை அலுவலக வளாகத்தில் நேற்று காவலர் வீரவணக்க நாளையொட்டி நடந்த நிகழ்ச்சியில், வீரமரணம்அடைந்த காவலர் நினைவு சின்னம் முன்பாக மலர்வளையம் வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அஞ்சலி செலுத்தினார். காவலர் வீரவணக்க நாள் விழாவில், தமிழ்நாட்டின் முதல்வர் கலந்துகொள்வது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

இதை தொடர்ந்து, தமிழ்நாடு காவல்துறையில் பணியிலிருந்த போது மரணம் அடைந்த காவல் ஆளிநர்களின் குடும்பத்தை சேர்ந்த 110 பேருக்கு அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கும், 65 பேருக்கு தகவல் பதிவு உதவியாளர் / வரவேற்பாளர் பணியிடத்திற்கும் கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்குவதின் அடையாளமாக 20 வாரிசுதாரர்களுக்கு பணிநியமன ஆணைகளை முதல்வர் வழங்கினார்.

மேலும், பணியின் போது வீரமரணமடைந்த திருப்பூர் மாவட்ட சிறப்பு உதவி ஆய்வாளர் சண்முகவேல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட தலைமை காவலர் ஜெஸ்மின் மில்டன் ராஜ் ஆகியோரது குடும்பத்தினருக்கு தமிழ்நாடு அரசின் சம்பள தொகுப்பு திட்டத்தில் தனிநபர் காப்பீட்டு தொகையாக ரூ.1 கோடிக்கான காசோலைகள்; பணியின் போது வீரமரணம் அடைந்த விருதுநகர் மாவட்ட சிறப்பு உதவி ஆய்வாளர் விஜயகுமார் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட தலைமை காவலர் ஜெஸ்மின் மில்டன் ராஜ் ஆகியோரது குடும்பத்தினருக்கு கருணைத் தொகையாக ரூ.20 லட்சத்திற்கான காசோலைகள், மேலும், காவல்துறையில் பணிபுரிந்து விபத்துகளில் மரணம் அடைந்த 3 காவலர்கள் என மொத்தம் 6 காவலர்களின் குடும்பத்தினர்களுக்கு தமிழ்நாடு அரசின் சம்பள தொகுப்பு திட்டத்தில் எஸ்.பி.ஐ மற்றும் யூனியன் பேங்க் ஆப் இந்தியா ஆகிய வங்கிகளின் மூலம் தனிநபர் விபத்து காப்பீட்டுத் தொகை மற்றும் தமிழ்நாடு அரசின் கருணைத் தொகை, என மொத்தம் 5 கோடியே 70 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை முதல்வர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், தலைமை செயலாளர் முருகானந்தம், உள்துறை செயலாளர் தீரஜ் குமார், டிஜிபி வெங்கடராமன்,

சென்னை காவல் ஆணையர் அருண், காவல்துறை உயர் அலுவலர்கள், பணியின் போது உயிர்நீத்த காவல்துறையினரின் குடும்பத்தினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## குன்னூர் பொதுமக்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நகராட்சி ஆணையாளரின் அறிவிப்பு



வடகிழக்கு பருவமழை தொடர்ந்து நான்கு குன்னூர் நகராட்சி பொதுமக்களுக்கு ஒரு அறிவிப்பு. வடகிழக்கு பருவமழை தொடர்ந்து நான்கு நாட்களாக குன்னூர் நகரப் பகுதியில் பெய்து வருகிறது. இதனால் பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டு மற்றும் வீட்டுக்குள் மழை நீர் புகுந்து பாதிப்புக்குள்ளாகியது.எனினும் வடகிழக்கு பருவமழை தொடர்ந்து பெய்யும் என்றும் ஆரஞ்சு அலர்ட் விடப்பட்டுள்ளது. எனவே நிலச்சரிவு அபாயம் உள்ள காந்திபுரம், இந்திரா நகர் , சித்தி விநாயகர் கோயில், கன்னி மாரியம்மன் கோயில், முத்தாலம்மன் கோயில், ஓட்டு பட்டறை வண்ணாரப்பேட்டை பகுதி, கிருஷ்ணாபுரம் பகுதியில் வசித்து வரும் பொதுமக்கள் அனைவரும் தங்கள் வசிப்பிடங்களுக்கு அருகில் உள்ள நகராட்சியால் ஏற்படுத்தப்பட்டுள்ள காந்திபுரம் நகராட்சி நடு நிலைப் பள்ளி, பாரதியார் பேரிடர் மேலாண்மை மண்டபம், ஜான் சர்ச் மண்டபம் ஆகிய வெள்ள நிவாரண முகாம்களுக்கு சென்று பாதுகாப்பாக இருக்குமாறு பொதுமக்களுக்கு ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு மற்றும் நகராட்சி ஆணையாளர் இளம்பரிதி ஆகியோர் அறிவுறுத்தியுள்ளனர்.

## விமான நிலையத்தில்3டி ஸ்கிரீன்கள் அமைத்து இயற்கை காட்சி ஒளிபரப்பு



சென்னை, அக்.23

சென்னை விமான நிலையத்தில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, உள்நாடு வருகை பகுதி 1 மற்றும் 3 முனையங்கள் மற்றும் சர்வதேச முனையம் வருகை பகுதி 2 முனையத்திலும், பெரிய அளவில் 3டி ஸ்கிரீன்கள் அமைத்து,

நாட்டின் இயற்கை எழில்கள், சுற்றுலா தளங்களில் உள்ள சிறப்பு காட்சிகள், வனவிலங்குகள், கிராமப்புற விளையாட்டுகள், பண்பாடு போன்ற புகைப்படங்கள், வீடியோ காட்சிகள் தொடர்ந்து ஒளிபரப்பு செய்யப்படுகிறது.

இந்த 3 டி பிரமிக்கத்தக்க காட்சிகள், சென்னை விமான நிலைய பயணிகள் மத்தியில் புதிய அனுபவத்தையும், மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

விமானநிலையம் வரும் பயணிகள், புதிய அனுபவத்துடன் பார்த்து ரசித்து செல்கின்றனர். தீபாவளி பண்டிகைக்காக தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள 3டி ஒளிபரப்பு காட்சிகள் நிரந்தரமாக சென்னை விமான நிலையத்தில் அமைக்க திட்டமிட்டுள்ளதாக சென்னை விமான நிலைய அதிகாரிகள் கூறுகின்றனர்.

## வடகிழக்கு பருவமழை: விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ள தமிழக அரசுக்கு செல்வப்பெருந்தகை வலியுறுத்தல்



சென்னை அக்.23

தமிழகத்தில்வடகிழக்குபருவமழை தொடங்கியுள்ளது. இதன் காரணமாக பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது. பருவமழை தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாவட்ட கலெக்டர்கள், மூத்த அதிகாரிகளுடன் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை நடத்தி வருகிறார்.

இந்நிலையில், பருவமழை காலத்தில்தமிழகஅரசும், உள்ளாட்சிஅமைப்புகளும் விரைவானநிவாரணநடவடிக்கைகளைமேற்கொள்ளவேண்டுமென தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில்

தமிழகத்தின் பல பகுதிகளில் வடகிழக்கு பருவமழைதீவிரமடைந்துவருவதால், அடுத்த சில நாட்களில் பல மாவட்டங்களில் கனமழை முதல் மிக கனமழை வரை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் பொருட்டு, அனைவரும் மிகுந்த விழிப்புடன் இருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். தாழ்வான பகுதிகளில் வசிப்போர் அவசியமெனில் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயரவும்.

மழையினால் ஏற்படக்கூடிய வெள்ளம், மின்சார ஆபத்து, மரம் சாய்வு போன்ற நிகழ்வுகளுக்குத் தயாராக மாவட்ட நிர்வாகம் உடனடி நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

மீனவர்கள் அடுத்த அறிவிப்பு வரும் வரை கடலுக்குச் செல்லாமல் பாதுகாப்பாக தங்கள் பகுதிகளிலே இருக்கவும்.

மக்களின் உயிர், சொத்துப் பாதுகாப்பே நமக்கு முதன்மையானது. எந்தவித சிக்கலும் ஏற்பட்டால் உடனடியாக மாவட்ட நிர்வாகத்தை அல்லது அவசர உதவி எண் 1077 ஐ தொடர்பு கொள்ளுவும்.

மழைக்காலத்தில் அரசும், உள்ளாட்சி அமைப்புகளும் ஒருங்கிணைந்து விரைவான நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறேன்.

அந்தந்த பகுதியில் உள்ள காங்கிரஸ் பேரியக்கத்தினர் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்படும் மக்களுக்கு உடனடியாக உதவிடுமாறு தங்களை கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.



## மகளின் திருமணத்திற்காக வைத்திருந்த நகை, பணத்துடன் கள்ளக்காதலியுடன் ஓடிய வியாபாரி

கொச்சி, அக்.22

கேரளமாநிலம் திருவனந்தபுரத்தைச் சேர்ந்தவர் சுரேந்திரன் (வயது 50). வியாபாரியான இவர் தனது மனைவி, மகன் மற்றும் மகளுடன் கொச்சி அருகே குன்னத்துநாடு கிராமத்தை அடுத்த வெங்கோலா பகுதியில் வசித்து வந்தார். இவரது மகளின் திருமணம் இன்னும் ஒருவாரத்தில் நடக்க உள்ளது. இதற்காக வீட்டில் 15 பவுன் நகை, ரூ.5 லட்சம் ரொக்கம் ஆகியவற்றை வைத்திருந்தனர். இந்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு சுரேந்திரன் மாயமானார். அவர் எங்கு சென்றார்?, என்ன ஆனார்? என்று குடும்பத்தினருக்கு தெரியாமல் இருந்தது. மேலும் அவரது செல்போனும் சுவிட்ச்ஆப் செய்யப்பட்டு இருந்தது.

அவர் மாயமான நிலையில், வீட்டில் இருந்த ரூ.5 லட்சம் ரொக்கம், 15 பவுன் நகைகளும் காணாமல் போயிருந்தது. அப்போது தான் சுரேந்திரன் மகள் திருமணத்திற்காக வீட்டில் வைக்கப்பட்டு இருந்த நகைகள் மற்றும் பணத்தை எடுத்துச் சென்றிருந்தது தெரியவந்தது. அவற்றின் மொத்த மதிப்பு ரூ.20 லட்சம் என்று கூறப்படுகிறது. இதையடுத்து எர்ணாகுளம் புறநகர் போலீசில் இது பற்றி புகார் அளிக்கப்பட்டது. அதன்பேரில் போலீசார் சுரேந்திரனை தேடினர். மேலும் தொடர்ந்து போலீசாரும், அவரது குடும்பத்தினரும் அவருடைய செல்போன் எண்ணில் தொடர்பு கொள்ள முயற்சித்து வந்தனர். இந்த நிலையில் அவரது செல்போன் ஆன் செய்யப்பட்டுஇருந்தது. ஆனால் சுரேந்திரன் தனக்கு வந்த எந்த அழைப்புகளையும் எடுத்து பேசாமல் இருந்தார். இந்த நிலையில் வேறொரு எண்ணில் இருந்து அவர் தனது மகளின் செல்போன் எண்ணுக்கு தொடர்பு கொண்டு பேசினார். அப்போது அவர் தான் பத்திரமாக இருப்பதாகவும், தன்னை தேட வேண்டாம் என்றும் தெரிவித்தார். பின்னர் மகள் கதறி அழுது கேட்டுக் கொண்டதால் அவருடைய திருமணத்திற்கு வர சம்மதம் தெரிவித்தார். இதற்கிடையே சைபர் கிரைம் போலீசார் மூலம் சுரேந்திரன் இருக்கும் இடத்தை போலீசார் கண்டுபிடித்தனர். அவர் திருவனந்தபுரத்தில் உள்ள ஒரு தனியார் விடுதியில் அறை எடுத்து தங்கி இருந்தார். அதையடுத்து போலீசார் அங்கு சென்று அவரை பிடித்தனர். அப்போது அவருடன் ஒரு பெண் இருந்தார். அது சுரேந்திரனின் கள்ளக்காதலி என்பதும், இருவரும் வீட்டைவிட்டு வெளியேறி திருமணம் செய்து கொண்டு அங்கு அறை எடுத்து தங்கி இருந்ததும் தெரியவந்தது. அதையடுத்து போலீசார் சுரேந்திரனை கைது செய்து 15 பவுன் நகைகள் மற்றும் ரூ.2.70 லட்சம் ரொக்கத்தை மீட்டனர். அவரது கள்ளக்காதலியை எச்சரித்து அங்கிருந்து அனுப்பி வைத்தனர். இந்த சம்பவம் கேரளாவில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## தீபாவளி பண்டிகை கொண்டாட்டம்; தமிழகத்தில் 13 இடங்களில் தீ விபத்து பதிவு



சென்னை, அக்.22

நாடு முழுவதும் தீபாவளி பண்டிகை இன்று கோலாகலத்துடன் கொண்டாடப்பட்டு வருகிறது.

இதனை முன்னிட்டு, மக்கள் காலையிலேயே எழுந்து, குளித்து முடித்து, புதிய ஆடைகளை உடுத்தி, இனிப்பு மற்றும் பலகாரங்களை உண்டு, வாழ்த்துகளை பரிமாறி கொண்டு, தீபாவளி பண்டிகையை உற்சாகத்துடன் கொண்டாடினர்.

இதேபோன்று சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பட்டாசுகளையும்வெடித்து மகிழ்ந்தனர்.

எனினும், தமிழகத்தில் வடகிழக்குபருவமழையை முன்னிட்டு பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அரசு எடுத்து உள்ளது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் தீ விபத்து ஏற்பட்டால் சிகிச்சை அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. இதேபோன்று, பல்வேறு மருத்துவமனைகளிலும் தீபாவளி தீக்காய சிறப்பு வார்டுகள் அமைக்கப்பட்டு உள்ளன.

தீபாவளி பண்டிகை கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக பட்டாசு வெடித்தது உள்ளிட்டவற்றால், 13 இடங்களில் தீ விபத்து ஏற்பட்டு உள்ளது என தீயணைப்பு துறை தெரிவித்து உள்ளது. இவற்றில் சென்னையில் மட்டுமே 3 இடங்களில் தீ விபத்து ஏற்பட்டு உள்ளது.

இந்த நிலையில், தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா. சுப்ரமணியன், சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவ மருத்துவமனைக்கு இன்று நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். இதன்பின் அவர் செய்தியாளர்கள் சந்திப்பில் பேசும்போது, பொதுமக்கள் பருத்தி ஆடைகளை அணிந்து பட்டாசுகளை வெடிக்கும்படி வேண்டுகோளாக கேட்டு கொள்கிறேன். அதுவே சிறந்தது. சில்க் அல்லது நைலான் உடைகளை அணிய வேண்டாம். காலணிகளை அணிந்து கொண்டு, திறந்த வெளியில் பட்டாசுகளை வெடியுங்கள் என்று கூறினார்.

## சிறுமி பாலியல் பலாத்காரம்: 17 வயது சிறுவன் போக்சோவில் கைது

மதுரை அக்.22

மதுரை மாவட்டம் கள்ளிக்குடி அருகே உள்ள ஒரு கிராமத்தை சேர்ந்த 17 வயது சிறுவன் மற்றொரு கிராமத்தை சேர்ந்த 16 வயது சிறுமியை காதலித்து வந்துள்ளார். மேலும் அந்த சிறுவன் திருமணம் செய்து கொள்வதாககூறி சிறுமியை பலமுறை பாலியல் பலாத்காரம் செய்ததாக கூறப்படுகிறது. இதனால் சிறுமி கர்ப்பம் அடைந்ததாக கள்ளிக்குடி ஊர் நல அலுவலர் ஆவுடையம்மாளுக்கு தகவல் கிடைத்தது. அதன் அடிப்படையில் அவர் திருமங்கலம் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். இதுகுறித்து போக்சோ சட்டத்தின்கீழ் போலீசார் வழக்குப்பதிவு செய்து சிறுவனை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

## 1 லட்சம் சரவெடி: 4.12 நிமிடங்களுக்கு இடைவிடாமல் கேட்ட பட்டாசு சத்தம்



கடலூர், அக்.22

நாடு முழுவதும் நேற்று தீபாவளி பண்டிகை கோலாகலமாக கொண்டாடப்பட்டது. அதுபோல் தமிழ்நாட்டிலும் அனைத்து மாவட்டங்களிலும் பொது மக்கள் உற்சாகத்துடன் தீபாவளி பண்டிகையை கொண்டாடினர்.

புத்தாடை அணிந்து, பலகாரங்கள் செய்தும், பட்டாசு வெடித்தும் உற்சாகமாக கொண்டாடினர். அதுபோல் கடலூர் மாவட்டம் குறிஞ்சிபாடி தாலுகா கோதண்டராமபுரத்தை சேர்ந்த 10 குடும்பத்தினர் ஒன்றாக சேர்ந்து வித்தியாசமான முறையில் பட்டாசு வெடித்தனர்.

10 குடும்பத்தினரும் தலா 10 ஆயிரம் சரவெடி வாங்கினர். அதனை ஒன்றாக சேர்ந்து 1 லட்சம் சரவெடியாக்கி வெடித்தனர். இதனால் பட்.. படார்... படார்.... என பட்டாசு வெடித்து சிதறியது. சுமார் 4 நிமிடங்கள் 12 வினாடிகள் இடைவிடாமல் பட்டாசு வெடி சத்தம் கேட்டுக் கொண்டே இருந்தது. இதனை சிலர் செல்போனில் வீடியோவாக எடுத்து சமூக வலைதளங்களில் பதிவிட்டனர்.

அந்த வீடியோ வைரலாகி காண்போரின் கண்களுக்கு விருந்தளித்து வருகிறது. இந்த வீடியோவை பார்த்த பலரும் இது தான்யா தீபாவளி கொண்டாட்டம் என கூறினர்.

## வடகிழக்கு பருவமழை: துரைப்பாக்கத்தில் துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு



சென்னை அக்.22

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. இதன் காரணமாக தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது.

இந்நிலையில், தமிழக துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சென்னை இன்று துரைப்பாக்கத்தில் வெள்ள நீர் வடிவதற்கான ஏற்பாடுகளை ஆய்வு செய்தார்.

சென்னையில் கடந்த சில நாட்களாக அவ்வப்போது கனமழை பெய்து வரும் நிலையில் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் துரைப்பாக்கத்தில் வெள்ள நீர் வடிகால் பணிகளை உதயநிதி ஸ்டாலின் ஆய்வு செய்தார்.

## ராமேஸ்வரத்தில் தொடர் கனமழை; இருளில் மூழ்கிய பாம்பன் பாலம்




ராமநாதபுரம், அக்.22

வங்கக்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு பகுதி காரணமாக தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது. அந்த வகையில் ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரத்தில் நேற்று அதிகாலை முதல் தொடர் கனமழை பெய்தது. இதனால் தீபாவளி தினத்தின் போது பட்டாசுகள் வெடிக்க முடியாமல் பொதுமக்கள் ஏமாற்றமடைந்தனர்.

இதற்கிடையில் பாம்பன் பாலம் முழுவதும் இருளில் மூழ்கி காட்சியளித்தது. வானம் மிகவும் மேக மூட்டத்துடன் காணப்பட்டதால் போதிய வெளிச்சம் இல்லாமல் பகல் நேரத்திலும் பாம்பன் பாலத்தின் மீது சென்ற வாகனங்கள் முகப்பு விளக்குகளை எரிய விட்டபடி சென்றன. அதே சமயம் அங்கு நிலவிய இதமான கால சூழலை அனுபவிக்க பாம்பன் பாலத்திற்கு வந்த சுற்றுலா பயணிகள், ஆர்வத்துடன் புகைப்படங்களை எடுத்துச் சென்றனர்.

## விளையாடிக் கொண்டிருந்தபோது தண்ணீர் வாளியில் மூழ்கி ஒன்றரை வயது குழந்தை உயிரிழப்பு

திருநெல்வேலி அக்.22

நெல்லை மாவட்டம் சேரன்மாதேவி அருகே உள்ள புலவன்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்தவர் ரவிக்குமார் (35 வயது). இவர், சேரன்மாதேவி சரகத்தில் ஊர்க்காவல் படை வீரராக பணியாற்றி வருகிறார். இவருக்கு திருமணமாகி மனைவியும், ஒரு மகளும், ஒன்றரை வயதில் பிரேம்குமார் என்ற ஆண் குழந்தையும் உள்ளது.

ரவிக்குமார் வேலைக்கு சென்றுவிட்டார். அவரது மனைவி வீட்டை சுத்தப்படுத்தும் பணியில் ஈடுபட்டு இருந்தார். அப்போது, வீட்டில் உள்ள ஒரு பிளாஸ்டிக் வாளியில் தண்ணீர் நிரப்பி வைக்கப்பட்டு இருந்தது. அதில் குழந்தை பிரேம்குமார் விளையாடிக் கொண்டு இருந்தது. அப்போது, எதிர்பாராதவிதமாக குழந்தை அந்த வாளி தண்ணீரில் தவறி விழுந்ததாகவும், இதை வீட்டில் இருந்தவர்கள் கவனிக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

தண்ணீரில் விழுந்ததில் மூச்சுத்திணறிய குழந்தை பிரேம்குமார் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தது. வாளி தண்ணீரில் குழந்தை இறந்து கிடந்ததை பார்த்த குடும்பத்தினர் அதிர்ச்சி அடைந்தனர். இது குறித்து உடனடியாக சேரன்மாதேவி போலீஸ் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று குழந்தையின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக நெல்லை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

தொடர்ந்து இந்த சம்பவம் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் தொடர் மழை: நெல்லை, தென்காசி மாவட்ட அணைகளில் நீர்மட்டம் கிடுகிடு உயர்வு



நெல்லை, அக்.22

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கி பெய்துவருகிறது. நெல்லை மற்றும் தென்காசி உள்ளிட்ட தென் மாவட்டங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. இந்தநிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு பலத்த மழை கொட்டியது. நேற்று காலை வானம் மேக மூட்டமாக காட்சியளித்தது.

அவ்வப்போது மழை பெய்தது. மேற்குதொடர்ச்சி மலைப்பகுதிகளில் தொடர்ந்து பரவலாக மழை பெய்து கொண்டிருக்கிறது. இதனால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து அணைகளின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது.

143 அடி உயரம் கொண்ட பாபநாசம் அணை நீர்மட்டம் 2 அடி உயர்ந்து 91.55 அடியாக உள்ளது. இந்த அணைக்கு வினாடிக்கு 1,677 கன அடி வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படாமல் அணை மூடப்பட்டுள்ளது. இதனுடன் இணைந்த 156 அடி உயரம் கொண்ட சேர்வலாறு அணை மேலும் 5 அடி உயர்ந்து 109 அடியாக உள்ளது.

118 அடி உயரம் கொண்ட மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 95.30 அடியாக உள்ளது. இந்த அணைக்கு வினாடிக்கு 500 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

கொடுமுடியாறு அணையின் நீர்மட்டமும் உயர்ந்து 42.25 அடியாக உள்ளது. அணைக்கு நீர்வரத்து 61 கன அடியாகவும், வெளியேற்றம் 5 கனஅடியாகவும் உள்ளது.

தென்காசி மாவட்டத்தில் கடனாநதி, ராமநதி, கருப்பாநதி, அடவிநயினார் அணைகள் நீர்வரத்து அதிகரித்து விரைவில் நிரம்பும் வகையில் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. குண்டாறு அணை ஏற்கனவே நிரம்பி விட்டதால் உபரிநீர் வெளியேறி வருகிறது.

பாபநாசம், மணிமுத்தாறு அணைகளில் இருந்து தண்ணீர் திறக்கப்படாவிட்டாலும் காட்டாற்று வெள்ளம் மற்றும் ஊர் பகுதியில் பெய்த மழையால் பெருகி ஓடிய தண்ணீர் ஆகியவை தாமிரபரணி ஆற்றில் கலந்து ஓடுகிறது. இதனால் நெல்லை தாமிரபரணி ஆற்றில் வழக்கத்தை விட தண்ணீர் அதிகரித்து ஓடுகிறது.

## 6 கிராம் நகைக்காக மூதாட்டி அடித்துக்கொலை: காதை அறுத்து தோடுகளை பறித்த கொடூரம்



சேலம், அக்.22

சேலம் கொண்டலாம்பட்டியை அடுத்த வேம்படிதாளம் இந்திராநகர் ரெயில்வே குடியிருப்பை சேர்ந்த தங்கவேல் என்பவரது மனைவி மாரியம்மாள் (85 வயது). இவருடைய மகன் தனபால் (56 வயது). ரெயில்வே ஊழியரான தங்கவேல் பணியில் இருந்தபோது இறந்துவிட்டார். இதையடுத்து தனபாலுக்கு ரெயில்வேயில் வாரிசு அடிப்படையில் வேலை வழங்கப்பட்டு சேலம் ரெயில் நிலையத்தில் ஊழியராக (கீமேன்) வேலை பார்த்து வருகிறார்.

இவர் தனது தாயார் மாரியம்மாள் மற்றும் மனைவியுடன் வசித்து வருகிறார். மூதாட்டி வீட்டின் வெளியே படுத்து தூங்கினார். மகன், மருமகள் வீட்டிற்குள் தூங்கிக்கொண்டிருந்தனர். இந்த நிலையில் தனபால் நேற்று அதிகாலை எழுந்து வீட்டிற்கு வெளியே வந்தார். அப்போது தனது தாயார் இடதுபக்க தலையில் பலத்த காயத்துடன் ரத்த வெள்ளத்தில் பிணமாக கிடந்தார். இதைக்கண்டு அதிர்ச்சி அடைந்த அவர் கொண்டலாம்பட்டி போலீசாருக்கு தகவல் கொடுத்தார். இதையடுத்து போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தினர்.

விசாரணையில் வீட்டின் வாசலில் தனியாக படுத்து இருந்த மூதாட்டியை மர்மநபர்கள் தலையில் அடித்துக்கொன்று அவருடைய 2 காதுகளை அறுத்து தோடு, மூக்குத்தி என மொத்தம் 6 கிராம் தங்கநகை மற்றும் காலில் அணிந்திருந்த 200 கிராம் வெள்ளி காப்பை பறித்து சென்றதும் தெரியவந்தது. இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து கொலையாளிகளை தேடி வருகின்றனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## தீபாவளி கொண்டாட்டம்: களைகட்டிய சென்னை மெரினா கடற்கரை




சென்னை, அக்.22

நாடு முழுவதும் தீபாவளி பண்டிகை இன்று வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டு வருகிறது. பொதுமக்கள் அதிகாலையிலேயே புத்தாடைகளை அணிந்து, இனிப்பு, பலகார வகைகளை அக்கம்பக்கத்தினருடன் பகிர்ந்து, கோவில்களுக்குச் சென்று பண்டிகையை கொண்டாடி மகிழ்ந்தனர். மேலும் விதவிதமான பட்டாசுகளை வெடித்து சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் உற்சாகமாக தீபாவளியை கொண்டாடினர்.

இதனிடையே, சென்னையில் வேலை செய்து வரும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மக்கள், தீபாவளியை கொண்டாட தங்கள் சொந்த ஊர்களுக்கு புறப்பட்டுச் சென்றனர். இதன்படி சுமார் 18 லட்சம் பேர் சென்னையில் இருந்து புறப்பட்டுச் சென்றதாக கூறப்படுகிறது. இதனால் சென்னையில் பிரதான சாலைகள் போக்குவரத்து நெரிசல் இன்றி காணப்பட்டன. அதே சமயம், சென்னையை சேர்ந்த மக்கள் கடற்கரை, பூங்கா உள்ளிட்ட இடங்களுக்கு தங்கள் குடும்பத்தினருடன் சென்று நேரம் செலவிட்டனர்.

அந்த வகையில், சென்னை மெரினா கடற்கரையில் இன்று அதிக அளவிலான மக்கள் குவிந்தனர். சென்னையில் இன்று பகல் நேரத்தில் பரவலான மழை பெய்து வந்த நிலையில், மாலை நேரத்திற்கு மேல் அதிகமான மக்கள் கூட்டம் குவிந்ததால் மெரினா கடற்கரை களைகட்டியது. சென்னையை சேர்ந்த மக்களும், பண்டிகையை தங்கள் சொந்த ஊர்களுக்கு சென்று கொண்டாட முடியாத மக்களும் கடற்கரையில் குவிந்து மகிழ்ச்சியுடன் பொழுதை கழித்தனர்.

## தமிழகத்தில் தொடரும் வெடிகுண்டு மிரட்டல்கள்: மக்களின் அச்சத்தை போக்க வேண்டும்: எஸ்டிபிஐ கட்சி வலியுறுத்தல்

சென்னை அக்.22

எஸ்டிபிஐ கட்சியின் மாநில பொதுச்செயலாளர் நிஜாம் முகைதீன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது;

தமிழகத்தில் கடந்த சில நாட்களாக பல்வேறு முக்கிய அமைப்புகள், அரசியல் தலைவர்கள், அரசு நிறுவனங்கள் மற்றும் பொது மக்களின் பாதுகாப்பான இடங்களுக்கு தொடர்ச்சியாக வெடிகுண்டு மிரட்டல்கள் விடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த மிரட்டல்கள் முதல்அமைச்சர் வீடு, எதிர்க்கட்சித் தலைவர் வீடு, டிஜிபி அலுவலகம், அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் அலுவலகங்கள், அரசு அதிகாரிகள், மனித உரிமை ஆர்வலர்கள், தொழிலதிபர்கள், பள்ளிகள், கல்லூரிகள், மத வழிபாட்டு தலங்கள், மருத்துவமனைகள், தொலைக்காட்சி நிறுவனங்கள், சினிமா பிரபலங்களின் வீடுகள் என பரந்த அளவில் அதிகரித்து வருகின்றன.

இந்தச் சம்பவங்கள் பரவலான அச்சத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளன. போலீசார் மேற்கொண்ட தீவிர சோதனைகள் முடிவில் அனைத்தும் 'புரளி' எனத் தெரிந்தாலும், தமிழக காவல்துறையில் நவீன தொலைதொடர்பு கண்காணிப்பு, வலுவான சைபர் கிரைம் அமைப்புகள் உள்ளிட்டவை இருந்தும் விஷமிகளின் இந்தச் செயல்கள் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன.

இந்த மிரட்டல்கள் மின்னஞ்சல் மூலம் சர்வசாதாரணமாக விடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 2 ஆண்டுகளில் 200க்கும் மேற்பட்ட இத்தகைய மிரட்டல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, கடந்த சில வாரங்களில் இவை கணிசமாக அதிகரித்துள்ளன. இத்தகைய தொடர் மிரட்டல்களால் மக்கள் அச்சத்தில் உழல்கின்றனர். புரளியாகத் தெரிந்தாலும், ஒரு மிரட்டல் உண்மையாக இருந்தால் அது பெரும் பேரழிவுக்கு வழிவகுக்கும்.

ஆகவே, இத்தகைய தொடர் மிரட்டல்கள் தமிழகத்தின் அமைதியைக் குலைத்துவிடக் கூடாது என்பதை கருத்தில் கொண்டு, இந்த மிரட்டல்களை மேற்கொள்ளும் விஷமிகளைக் கண்டறிய காவல்துறை இதை சவாலாக எடுத்துக் கொண்டு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சைபர் பாதுகாப்பை மேம்படுத்தி, சிறப்புக் குழுவை அமைத்து, பாதுகாப்பை உறுதி செய்து மக்களின் அச்சத்தைப் போக்க வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## கள்ளக்குறிச்சி அருகே பட்டாசு வெடித்ததில் கட்டிடம் இடிந்து விழுந்தது

கள்ளக்குறிச்சி அக்.22

தீபாவளி பண்டிகை நாடு முழுவதும் இன்று உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டு வருகிறது. மக்கள் காலையிலே எழுந்து, குளித்து, புத்தாடைகளை உடுத்தி, இனிப்பு மற்றும் பலகாரங்களை உண்டு, வாழ்த்துகளை பரிமாறி, தீபாவளி பண்டிகையை உற்சாகத்துடன் கொண்டாடி வருகின்றனர். சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பட்டாசுகளை வெடித்து மகிழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் சிறுவர்கள் பட்டாசு வெடித்தபோது கட்டிடம் ஒன்று இடிந்து விழுந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தியாகதுருகம் அருகே உள்ள கூத்தக்குடி கிராமத்தில் மாரியம்மன் கோவில் உள்ளது. இந்த கோவிலுக்கு சொந்தமான பொருட்கள் மற்றும் உபகரணங்கள் அருகில் உள்ள கட்டிடத்தில் வைக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் அந்தப்பகுதியை சேர்ந்த சிறுவர்கள் இன்று பட்டாசு வெடித்தபோது, எதிர்பாராதவிதமாக ஒரு பட்டாசு, அந்த கட்டிடத்திற்குள் விழுந்ததாக தெரிகிறது. இதில் அந்த கட்டிடம் முழுவதும் இடிந்து விழுந்து சேதமானது. இருப்பினும் அங்கு யாரும் இல்லாததால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது. மேலும் அங்கு வைக்கப்பட்டிருந்த கோவிலுக்கு சொந்தமான உபகரணங்கள் சேதமடைந்ததாக கூறப்படுகிறது. இந்த சம்பவத்தால் அந்தப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# நெல்லை இஸ்கான் கோவிலில் சிறப்பு தீப திருவிழா.. பக்தர்கள் நேரடியாக பகவானுக்கு ஆரத்தி காட்டலாம்

திருநெல்வேலி அக்.22

இந்துக்களின் முக்கிய பண்டிகையான தீபாவளி பண்டிகை இன்று நாடு முழுவதும் உற்சாகமாக கொண்டாடப்படுகிறது. மக்கள் தங்கள் இல்லங்களில் தீபங்களை ஏற்றி வழிபடுகிறார்கள். அதே போல் கோவில்களில் நடைபெறும் சிறப்பு வழிபாடுகளிலும் ஏராளமான மக்கள் பங்கேற்று இறைவனை தரிசனம் செய்கின்றனர்.

அவ்வகையில் தீபாவளியின் முழு பலனை பக்தர்கள் பெறுவதற்காக திருநெல்வேலி இஸ்கான் கோவிலில் சிறப்பு தீப திருவிழா நடைபெறுகிறது. சிறப்பு பூஜையின்போது பகவானுக்கு பக்தர்கள் நேரடியாக நெய் தீப ஆரத்தி காட்டுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி இன்று காலை 7.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரை தீப ஆரத்தி நடைபெற்றது.

இதேபோல் மாலை 4.30 மணி முதல் இரவு 8 மணி வரை சிறப்பு தீப ஆரத்தி நடைபெற உள்ளது.

பொதுமக்கள் இந்த நேரத்தில் இஸ்கான் கோவிலுக்கு சென்று சிறப்பு பூஜையில் கலந்து கொள்வதுடன்,கிருஷ்ண பலராமருக்கு நெய் தீப ஆரத்தி காட்டி பகவானின் திருவருள் பெறலாம்.

தீபத் திருநாளில் பக்தர்கள் குடும்பத்துடன் கிருஷ்ணர் கோவிலுக்கு சென்று பகவானை வேண்டி "நெய் தீப ஆரத்தி" காட்ட வேண்டும் என்றும், "ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே; ஹரேராம ஹரேராம ராம ராம ஹரே ஹரே" என்ற பதினாறு வார்த்தைகளடங்கிய மகாமந்திரத்தை குறைந்தபட்சம் 108 முறையாவது உச்சரிக்க வேண்டும் என இஸ்கான் கேட்டுக்கொண்டுள்ளது.

# இந்திய விண்வெளி மையம் 2035ம் ஆண்டு நிறுவப்படும்: இஸ்ரோ தலைவர் நாராயணன்



குமரி, அக்.22

குமரி மாவட்டம் சாமி தோப்பில் உள்ள அய்யா வைகுண்டசாமி தலைமை பதியில் இஸ்ரோ தலைவர் நாராயணன் குடும்பத்தினருடன் சாமி தரிசனம் செய்ய வந்தார். பின்னர் இஸ்ரோ தலைவர் நாராயணன் நிருபர்களுக்கு பேட்டி அளித்த போது கூறியதாவது:

இந்தியாவிற்காக விண்வெளி மையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த திட்டத்திற்கு அரசு முதற்கட்ட அனுமதி வழங்கி உள்ளது. 52 டன் எடை கொண்ட இந்திய விண்வெளி மையம் 5 ராக்கெட் மூலம் விண்ணுக்கு கொண்டு சென்று நிறுவப்பட உள்ளது. இதற்கான முதல் ராக்கெட் வருகிற 2028ம் ஆண்டு விண்ணில் ஏவப்படும்.

பின்னர் 4 ராக்கெட் மூலம் விண்வெளி மையம் எடுத்து செல்லப்பட்டு 2035ம் ஆண்டு நிறுவப்படும். இதற்கான சோதனை இந்த ஆண்டு வெற்றிகரமாக செய்யப்பட்டு உள்ளது. வருகிற டிசம்பர் மாதம் மார்க் 3 ராக்கெட் மூலம் அமெரிக்காவின் 6 ஆயிரம்கிலோ எடை கொண்ட தொலைதொடர்பு செயற்கைக்கோள் விண்ணுக்கு அனுப்பப்படும்.

மனிதர்களை விண்ணுக்கு அனுப்பும் ககன்யான் திட்டத்தின் ஒரு பகுதியாக 3 ஆளில்லா ராக்கெட் அனுப்பி வெற்றி பெற வேண்டும். அந்த வகையில் இந்த ஆண்டு இறுதியில் முதல் ராக்கெட் அனுப்பி சோதனை செய்யப்படும். 2027ம் ஆண்டு தொடக்கத்தில் ககன்யான் திட்டம் செயல்படுத்தப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# நெல்லை இஸ்கான் கோவிலில் சிறப்பு தீப திருவிழா... சிறப்பு தீப ஆரத்தியில் பங்கேற்க பக்தர்களுக்கு அழைப்பு



திருநெல்வேலி அக்.22

இந்துக்களின் முக்கிய பண்டிகையான தீபாவளி பண்டிகை இன்று நாடு முழுவதும் உற்சாகமாக கொண்டாடப்படுகிறது. மக்கள் தங்கள் இல்லங்களில் தீபங்களை ஏற்றி வழிபடுகிறார்கள். அதே போல் கோவில்களில் நடைபெறும் சிறப்பு வழிபாடுகளிலும் ஏராளமான மக்கள் பங்கேற்று இறைவனை தரிசனம் செய்கின்றனர்.

அவ்வகையில் தீபாவளியின் முழு பலனை பக்தர்கள் பெறுவதற்காக திருநெல்வேலி இஸ்கான் கோவிலில் சிறப்பு தீப திருவிழா நடைபெறுகிறது. சிறப்பு பூஜையின்போது பகவானுக்கு பக்தர்கள் நேரடியாக நெய் தீப ஆரத்தி காட்டுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி இன்று காலை 7.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரை தீப ஆரத்தி நடைபெற்றது.

இதேபோல் மாலை 4.30 மணி முதல் இரவு 8 மணி வரை சிறப்பு தீப ஆரத்தி நடைபெற உள்ளது. பொதுமக்கள் இந்த நேரத்தில் இஸ்கான் கோவிலுக்கு சென்று சிறப்பு பூஜையில் கலந்து கொள்வதுடன்,கிருஷ்ண பலராமருக்கு நெய் தீப ஆரத்தி காட்டி பகவானின் திருவருள் பெறலாம்.

தீபத் திருநாளில் பக்தர்கள் குடும்பத்துடன் கிருஷ்ணர் கோவிலுக்கு சென்று பகவானை வேண்டி "நெய் தீப ஆரத்தி" காட்ட வேண்டும் என்றும்,

"ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே; ஹரேராம ஹரேராம ராம ராம ஹரே ஹரே" என்ற பதினாறு வார்த்தைகளடங்கிய மகாமந்திரத்தை குறைந்தபட்சம் 108 முறையாவது உச்சரிக்க வேண்டும் என இஸ்கான் கேட்டுக்கொண்டுள்ளது.

# கொடைக்கானல் பேரிஜம் ஏரிக்கு செல்ல 2 நாட்கள் தடை



கொடைக்கானல், அக்.22

'மலைகளின் இளவரசி'யான கொடைக்கானலில் சிறந்த சுற்றுலா இடமாக பேரிஜம் ஏரி பகுதி விளங்குகிறது. இந்த ஏரி பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் அமைந்துள்ளது. இயற்கை எழில் கொஞ்சும் வகையில் உள்ள இந்த ஏரியை பார்வையிட தினமும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர்.

இந்தநிலையில் ஏரி பகுதியில் பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளது. இதேபோல் தீபாவளி பண்டிகையையொட்டி வனத்துறை தற்காலிக ஊழியர்கள் விடுமுறை எடுத்துள்ளனர்.இதையொட்டி இன்றும் (திங்கட்கிழமை), நாளையும் என 2 நாட்கள் பேரிஜம் ஏரிக்கு சுற்றுலா பயணிகள் செல்ல தற்காலிகமாக தடை விதிக்கப்பட்டுள்ளது.

22ந்தேதி முதல் வழக்கம்போல் பேரிஜம் ஏரிக்கு செல்ல அனுமதி வழங்கப்படும் என்று கொடைக்கானல் வனச்சரகர் செந்தில் தெரிவித்துள்ளார்.

# ஐ.என்.எஸ். விக்ராந்த் போர்க்கப்பலின் சிறப்புகள் என்னென்ன...?



புதுடெல்லி, அக்.22

பிரதமர் மோடி ஒவ்வொரு ஆண்டும் தீபாவளி பண்டிகையை ராணுவ வீரர்களுடன் கொண்டாடி வருகிறார். அதன்படி இந்த ஆண்டு அவர் கோவா எல்லையில் உள்ள கர்நாடகம் மாநிலம் உத்தரகன்னடா மாவட்டத்தில் உள்ள கார்வார் கடற்படை தளத்தில் ஐ.என்.எஸ். விக்ராந்த் போர்க்கப்பலில் வைத்து கடற்படையினருடன் சேர்ந்து தீபாவளியை கோலாகலமாக கொண்டாடினார்.

இந்த போர்க்கப்பலின் சிறப்பு அம்சங்கள் பின்வருமாறு:

★ முதன்முறையாக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட விமானம் தாங்கிக் கப்பல் ஐ.என்.எஸ். விக்ராந்த். 2022ம் ஆண்டு இயக்கப்பட்ட ஐ.என்.எஸ். விக்ராந்த், சொந்தமாக விமானம் தாங்கிக் கப்பல்களை வடிவமைத்து கட்டமைக்கும் திறன்கொண்ட நாடுகளின் பட்டியலில் இந்தியாவை இணைத்தது.

★ கொச்சின் ஷிப்யார்ட் லிமிடெட் நிறுவனத்தால் கட்டமைக்கப்பட்ட இது, இந்தியாவின் வளர்ந்து வரும் கடற்படை மற்றும் தொழில்துறை வலிமையை பிரதிபலிக்கிறது.

★ 'விக்ராந்த்' என்ற பெயருக்கு 'தைரியமான' அல்லது 'வெற்றியாளர்' என்று பொருள்.

★ 262 மீட்டர் நீளமும் 62 மீட்டர் அகலமும் கொண்டது. தோராயமாக இரண்டு கால்பந்து மைதானங்களின் அளவு மற்றும் 18 தளங்கள் உயரம் கொண்டது.

★ இது கிட்டத்தட்ட 1,600 பேர் கொண்ட குழுவினரையும், 16 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையையும், 2,400 பெட்டிகளையும் கொண்டுள்ளது, மேலும் 250 டேங்கர் எரிபொருள் கொண்டு செல்கிறது.

★ இந்த விமானம் தாங்கிக் கப்பலில் மிக்29கே போர் விமானங்கள் மற்றும் பல்வேறு ஹெலிகாப்டர்கள் உட்பட 30 விமானங்கள் வரை தாங்கும் சக்தி கொண்டது.

★ பல வருட சோதனைகள் மற்றும் அனுமதிகளுக்குப் பிறகு, ஐ.என்.எஸ். விக்ராந்த் கடந்த ஆண்டு முழு செயல்பாட்டு அந்தஸ்தைப் பெற்றது.

இப்போது மேற்கு கடற்படை கட்டளையின் கீழ், இது இந்தியப் பெருங்கடல் பகுதி முழுவதும் சிக்கலான கடற்படைப் பணிகளைக் கையாளத் தயாராக உள்ள ஒரு முழுமையான திறன் கொண்ட போர்க்கப்பலாக திகழ்ந்து வருகிறது.

# சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் சிறப்பு வார்டில் 89 பேருக்கு சிகிச்சை; அமைச்சர் மா. சுப்ரமணியன் ஆய்வு



சென்னை, அக்.22

நாடு முழுவதும் தீபாவளி கொண்டாட்டம் களைகட்டியுள்ளது. பண்டிகையை முன்னிட்டு, காலையிலேயே எழுந்து, குளித்து முடித்து, புதிய ஆடைகளை உடுத்தி, இனிப்பு மற்றும் பலகாரங்களை உண்டு, வாழ்த்துகளை பரிமாறி கொண்டு, மக்கள் தீபாவளி பண்டிகையை உற்சாகத்துடன் கொண்டாடி வருகின்றனர். இதே போன்று சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பட்டாசுகளையும் வெடித்து மகிழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில், தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா. சுப்ரமணியன், சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவ மருத்துவமனையில் உருவாக்கப்பட்டு உள்ள தீபாவளி தீக்காய சிறப்பு வார்டுக்கு இன்று நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது அவர், டாக்டர்கள் மற்றும் சுகாதார நல பணியாளர்களுக்கு தீபாவளியை முன்னிட்டு, இனிப்புகளை வழங்கினார். இதன்பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அவர், நாங்கள், கீழ்ப்பாக்கம் மருத்துவ மருத்துவமனையில் தீபாவளி தீக்காய சிறப்பு வார்டு ஒன்றை உருவாக்கி வைத்திருக்கிறோம். நேற்று முதல் இது வரை, காயமடைந்த 89 பேர் சிகிச்சைக்காக கொண்டு வரப்பட்டு உள்ளனர்.

அவர்களில் 48 பேர் தீவிர காயமடைந்து உள்ளனர். மற்றவர்கள் சிகிச்சைக்கு பின்னர் வீட்டுக்கு திரும்பி விட்டனர். 48 பேரில் 8 பேருக்கு அறுவை சிகிச்சை நடத்தப்பட உள்ளது என்றார். தொடர்ந்து அவர், பொதுமக்கள் பருத்தி ஆடைகளை அணிந்து பட்டாசுகளை வெடிக்கும்படி நான் வேண்டுகோளாக கேட்டு கொள்கிறேன். அதுவே சிறந்தது. சில்க் அல்லது நைலான் உடைகளை அணிய வேண்டாம். காலணிகளை அணிந்து கொண்டு, திறந்த வெளியில் பட்டாசுகளை வெடியுங்கள் என்றும் அவர் கேட்டு கொண்டார்.

# தீபாவளி பண்டிகை: சென்னையில் 60 மெட்ரிக் டன் பட்டாசு கழிவுகள் அகற்றம்



சென்னை, அக்.22

நாடு முழுவதும் நேற்று தீபாவளி பண்டிகை கோலாகலமாக கொண்டாடப்பட்டது. அது போல் தமிழ்நாட்டிலும் அனைத்து மாவட்டங்களிலும் பொதுமக்கள் உற்சாகத்துடன் தீபாவளி பண்டிகையை கொண்டாடினர். புத்தாடை அணிந்து, பலகாரங்கள் செய்தும், பட்டாசு வெடித்தும் உற்சாகமாக கொண்டாடினர். தலைநகர் சென்னையிலும் நேற்று இரவு இடைவிடாது பட்டாசு சத்தம் கேட்டுக்கொண்டே இருந்தது.

இந்த நிலையில், தீபாவளி பண்டிகையை தொடர்ந்து சென்னையில் நேற்று மாலை 6 மணி வரை 60 மெட்ரிக் டன் பட்டாசு கழிவுகள் அகற்றப்பட்டுள்ளதாக சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது. அதிகபட்சமாக ஆலந்தூர் மண்டலத்தில் 6.89 மெட்ரிக் டன், பெருங்குடி மண்டலத்தில் 6.03 மெட்ரிக் டன் கழிவுகள் அகற்றப்பட்டுள்ளன. பட்டாசு கழிவுகளை அகற்றும் பணியில் 6,000க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். பட்டாசு கழிவுகள் தரம்பிரிக்கப்பட்டு கும்மிடிபூண்டி, பெங்குடி, கொடுங்கையூர்கிடங்குகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. மேலும் பட்டாசுகழிவுகளைதனியாக சேகரித்து தூய்மை பணியாளர்களிடம் ஒப்படைக்க சென்னை மாநகராட்சி அறிவுறுத்தி உள்ளது. இதைபோல தமிழ்நாடு முழுவதும் 108 ஆம்புலன்ஸ்களுக்கு வழக்கத்தை விட 61% அழைப்புகள் கூடுதலாக வந்ததாக 108 ஆம்புலன்ஸ் நிர்வாகம் தெரிவித்துள்ளது. தீபாவளி தினமான நேற்று மாலை 6 மணி வரை மட்டும் 4,635 அழைப்புகள் வந்ததாகவும், அதில் தீக்காயங்களுக்காக 135 அழைப்புகள் வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 6 சிறப்பு ரெயில்கள் ரத்து; தெற்கு ரெயில்வே அறிவிப்பு

சென்னை அக்.22

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சொந்த ஊர்களுக்கு சென்ற பயணிகள் திரும்புவதற்கு ஏதுவாக பல்வேறு சிறப்பு ரெயில்களை தெற்கு ரெயில்வே அறிவித்திருந்தது. இந்த நிலையில் முன்பதிவு குறைவாக இருப்பதால், 22 முதல் 29ம் தேதி வரை இயக்கப்பட இருந்த 6 சிறப்பு ரெயில்கள் ரத்து செய்யப்படுவதாக தெற்கு ரெயில்வே அறிவித்துள்ளது.

அதன்படி நாளை மறுநாள் (22ந்தேதி) மதியம் 3.10 மணிக்கு சென்னை சென்டிரலில் இருந்து புறப்பட்டு கோட்டயம் செல்வதாக அறிவிக்கப்பட்டிருந்த சிறப்பு ரெயில் (06121) முழுவதுமாக ரத்து செய்யப்பட்டுள்ளது. அதேபோல 23ந்தேதி மதியம் 2.05 மணிக்கு கோட்டயத்தில் இருந்து சென்னை சென்டிரல் வரை இயக்கப்படவிருந்த சிறப்பு ரெயில் (06122) முழுவதுமாக ரத்து செய்யப்பட்டுள்ளது. 24 மற்றும் 26 ஆகிய தேதிகளில் மதியம் 3 மணிக்கு செங்கல்பட்டில் இருந்து புறப்பட்டு திருநெல்வேலி செல்வதாக அறிவிக்கப்பட்டிருந்த செங்கல்பட்டு திருநெல்வேலி அதிவிரைவு சிறப்பு ரெயில் (06153) முழுவதுமாக ரத்து செய்யப்பட்டுள்ளது.

அதேபோல 24 மற்றும் 26 ஆகிய தேதிகளில் அதிகாலை 4 மணிக்கு திருநெல்வேலியில் இருந்து செங்கல்பட்டு வரை இயக்கப்படவிருந்த சிறப்பு ரெயில் (06154) முழுவதுமாக ரத்து செய்யப்பட்டுள்ளது.

நாகர்கோவிலில் இருந்து 28ந்தேதி காலை 9.15 மணிக்கு புறப்பட்டு சென்னை சென்டிரல் வரை இயக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த சிறப்பு ரயில் (06054) முழுமையாக ரத்து செய்யப்பட்டுள்ளது. 29ந்தேதி அதிகாலை 4.15 மணிக்கு சென்னை சென்டிரலில் இருந்து நாகர்கோவில் வரை செல்வதாக அறவிக்கப்பட்டிருந்த சிறப்பு ரெயில் (06053) முழுவதுமாக ரத்து செய்யப்பட்டுள்ளது.

# விருதுநகரில் கனமழை: வைப்பாற்றில் வெள்ளப்பெருக்கு



விருதுநகர், அக்.22

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்து வருகிறது. குறிப்பாக, தென்மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது.

இந்நிலையில், விருதுநகர் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக சாத்தூர் அருகே வெம்பக்கோட்டை பகுதியில் உள்ள வைப்பாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. கீழாண்மறை நாடு செல்லும் சாலையில் உள்ள தரைப்பாலத்தை மூழ்கடித்து ஆற்றுநீர் செல்கிறது. இதனால் அந்த சாலையை பயன்படுத்தும் மக்கள் சிரமமடைந்துள்ளனர். கனமழை தொடர்ந்து வருவதால் வெள்ளப்பெருக்குமேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அரசு மருத்துவமனையில் மழைநீர் தேங்காமல் இருக்க துரித நடவடிக்கை அமைச்சர் மா.சுப்பிரமணியன்

சென்னை, அக்.22

சென்னை அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், தீபாவளி பண்டிகை பட்டாசு விபத்தில் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் மருத்துவ பயனாளிகளை நேற்று முன்தினம் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் சந்தித்து நலம் விசாரித்தார். மேலும், தீ விபத்து சிகிச்சை வார்டுகளின் பணிபுரியும் டாக்டர்கள், நர்சுகளுடன் தேநீர் அருந்தி, இனிப்புகள் வழங்கி கலந்துரையாடினார்.

பின்னர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

அனைத்து மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, வட்டார அரசு மருத்துவமனைகளிலும் தீபாவளிக்கென்று சிறப்பு சிகிச்சை வார்டுகள் தொடங்கப்பட்டிருகிறது. குறிப்பாக, 36 அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 20 படுக்கை வீதம் தீவிர சிகிச்சைப் பிரிவிற்காக தீக்காய பிரிவு வார்டுகள் தொடங்கப்பட்டிருக்கிறது. அந்தவகையில், கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் 20 படுக்கை வசதிகளுடன் கூடிய வெண்டிலேட்டர் கருவியுடன் கூடிய வார்டுகள், ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என தனித்தனி வார்டுகள் தொடங்கப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் கடந்த 19ந்தேதி முதல் பட்டாசு வெடித்ததில் பாதிக்கப்பட்டு 89 பேர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர். 48 பேர் சிகிச்சை பெற்று வருகிறாா்கள். இதில் 8 பேருக்கு சிறிய அளவிலும், 32 பேருக்கு மிகச்சிறிய அளவிலும் அறுவை சிகிச்சையும் செய்யப்பட்டுள்ளது. கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் 6 குழந்தைகள் உள்பட 7 பேர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். யாருக்கும் உயிர் பாதிப்பு பிரச்சினை இல்லை. தீக்காயம் சிகிச்சைகளுக்கு வரும் பொதுமக்களுக்கு நல்ல முறையில் டாக்டர்கள் சிகிச்சை வழங்கி வருகின்றனர்.

வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்தமாதிரியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பது குறித்தான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருகிறது. கடந்த காலங்களில் எங்கெல்லாம் மழை பாதிப்புகள் அதிகமாக இருந்ததோ அந்த பகுதிகளில் தற்போது முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பாக, ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் கடந்த 3 ஆண்டுகளாக மழைநீர் தேங்கியது. இப்போது அது சரிசெய்யப்பட்டது. தூத்துக்குடியில் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு பெய்த கனமழையின்போது தூத்துக்குடி, ஏரல் ஆகிய அரசு மருத்துவமனைகள் பெரும் பாதிப்பிற்கு உள்ளானது. தற்போது அந்த பாதிப்பும் சரிசெய்யப்பட்டுள்ளது. தற்போது எந்தெந்த மருத்துவமனையில் மழைநீர் தேங்கியதோ அங்கு எல்லாம் மாவட்ட ஆட்சி நிர்வாகம், பொதுப்பணித்துறை நிர்வாகம் அந்த பாதிப்பை சரி செய்து வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

தினகனி
NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253
22.10.2025

# வடகிழக்கு பருவ மழை தொடக்கம்: மாநிலம் முழுவதும் தடையில்லா மின்சாரம்; தமிழக அரசு உத்தரவு

சென்னை, அக்.21

வடகிழக்கு பருவ மழை தொடங்கியதை யொட்டி பல்வேறு மாவட்டங்களில் கன மழை பெய்துவரும் நிலையில், மின்சாரத்துறை செய்ய வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து, மின்சார வாரிய தலைவர் டாக்டர் ஜெ.ராதா கிருஷ்ணன், சென்னை மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் செயல்படும் மின்பகிர்மானகட்டுப்பாட்டுஅறை, மாநில மின் பகிர்ந்தளிப்பு மையம் மற்றும் மின்னகம் ஆகியவற்றை ஆய்வு செய்து அதிகாரிகளுக்கு உரிய ஆலோசனை வழங்கினார். இதுகுறித்து டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறியதாவது:

போதிய தளவாடங்கள் இருப்பு வைத்திருப்பதுடன், மின்தடை தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்புடன் கூடிய விரைவான மின்சார வினியோகம் மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டு உள்ளது. பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் சுழற்சி முறையில் பணி செய்யவும், மாநில அளவில் மின்சார தளவாடப்பொருட்கள் உடனுக்குடன் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு விரைந்து எடுத்து செல்ல பணியாளர் குழுக்களை தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும். பொதுமக்கள் மற்றும் பணியாளர் பாதுகாப்புடன் கூடிய தடையில்லா மின்வினியோகத்தை உறுதி செய்ய வேண்டும்.

கனமழை மற்றும் காற்றின் வேகம் காரணமாக மரங்கள் மின்சார கம்பங்களின் மீது விழுந்து சேதமடையும்போது, உடனடியாக, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து மிகுந்த கவனத்துடனும், உரியபாதுகாப்புடனும் செயல்பட்டு தடையில்லா மின்சாரம் வழங்கப்படும்.

மாவட்ட பேரிடர் மேலாண்மை துறையினர், மின்சார வாரிய அலுவலர்கள் தலைமையிலான களப்பணி குழுக்கள், தொடர்பு எண்கள் மற்றும் பணியாளர் விவரங்கள் புதுப்பிக்கப்பட்டு தயார்நிலை உறுதி செய்ய வேண்டும். பொதுமக்கள் மின்தடை புகார்களை மின்னகத்தினை "9498794987" என்ற எண்ணில் தெரிவிக்கலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# தமிழ்நாட்டில் வெளுத்து வாங்கும் வடகிழக்கு பருவ மழை: அணைகள், ஏரிகள் வேகமாக நிரம்புகின்றன

சென்னை, அக்.21

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை வெளுத்து வாங்கி வருகிறது. நேற்று ஒரே நாளில் சராசரியாக தமிழகம் முழுவதும் 2 செ.மீ. மழைப் பதிவாகியுள்ளது. அணைகள், ஏரிகள், குளங்கள் அனைத்தும் வேகமாக நிரம்பி வருகின்றன.

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை மிக தீவிரமாக உள்ளது. கடந்த 16ந்தேதி தொடங்கியதில் இருந்து பருவமழை பரவலாக தமிழ்நாட்டில் பெய்கிறது. அதிலும் நேற்று பெரும்பாலான இடங்களில் மழை கொட்டியது.

சராசரியாக பெய்த 2 செ.மீ. மழையுடன் சேர்த்து, தமிழ்நாட்டில் 12.8 செ.மீ. மழை பதிவாகியிருக்கிறது. இது இயல்பான மழை அளவான 8.2 செ.மீ. விட 56 சதவீதம் அதிகம் ஆகும். அதிகபட்சமாக ராஜபாளையத்தில் 18 செ.மீ., கும்மிடிப்பூண்டியில் 16 செ.மீ., பொன்னேரியில் 14 செ.மீ. காயல்பட்டினம், குன்னூரில் தலா 12 செ.மீ. உள்பட 230க்கும் மேற்பட்ட இடங்களில் மழை பெய்துள்ளது. தொடர்ந்து மழை பெய்து வருவதால், பெரும்பாலான அணைகள், ஏரிகள், குளங்கள் வேகமாக நிரம்பி வருகின்றன. சில இடங்களில் வெள்ளப் பெருக்கும் ஏற்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக இன்று (ஞாயிற்றுக்கிழமை) முதல் அடுத்த 6 நாட்களுக்கு தமிழ்நாட்டில் அனேக இடங்களிலும், சில இடங்களில் கனமழையும் பதிவாகும் என ஆய்வு மையம் தெரிவித்திருக்கிறது.

அதன்படி, இன்று தமிழ்நாட்டில் அனேக இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் மிதமான மழையும், கோவை மாவட்ட மலைப்பகுதிகள், நீலகிரி, ஈரோடு, திருப்பூர், தேனி, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யக்கூடும்.

தீபாவளி பண்டிகை தினமான நாளை (புதன்கிழமை) தமிழ்நாட்டில் அனேக இடங் களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் மிதமான மழையும், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர்,

தஞ்சாவூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம், கள்ளக்குறிச்சி, நீலகிரி, கோவை மாவட்ட மலைப்பகுதிகள், திருப்பூர், ஈரோடு, கரூர், நாமக்கல், மதுரை, சிவகங்கை, விருதுநகர், திண்டுக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும்காரைக்கால்பகுதிகளிலும்கனமழையும் பெய்ய வாய்ப்பு இருக்கிறது.

# தேனி: முல்லைப்பெரியாற்றின் கரையோரம் 300 வீடுகளை வெள்ளம் சூழ்ந்தது

தேனி, அக்.21

தேனி மாவட்டத்தில் பெய்த கனமழையால் முல்லைப்பெரியாற்றில் நேற்று வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. காலையில் இருந்தே ஆற்றில் நீர்வரத்து அதிகரித்த வண்ணம் இருந்தது. தேனியை அடுத்த பழனிசெட்டிபட்டி ஆஞ்சநேயா நகர் முல்லைப்பெரியாற்றின் கரையோரம் அமைந்துள்ளது.

2 மணியளவில் ஆற்றின் கரையைமேவி இந்த குடியிருப்பு பகுதிக்குள் மழைநீர் புகுந்தது. நேரம் செல்லச் செல்ல குடியிருப்பு பகுதிக்குள் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடத் தொடங்கியது.

இந்த பகுதியில் உள்ள 300க்கும் மேற்பட்ட வீடுகளை வெள்ளம் சூழ்ந்தது. தெருக்களில் வெள்ளம் சீறிப் பாய்ந்து ஓடியது. இதனால் மக்கள் வீடுகளுக்குள் சிக்கித் தவித்தனர். பலரும் வீட்டின் மாடிப் பகுதிக்கு சென்றனர். தகவல் அறிந்தவுடன் பழனிசெட்டிபட்டி பேரூராட்சி தலைவர் மிதுன் சக்கரவர்த்தி, துணைத்தலைவர் மணிமாறன் ஆகியோர் அங்குவந்தனர். பின்னர் பேரூராட்சி அதிகாரிகள், போலீசார், தீயணைப்பு படையினரும் அங்கு வந்தனர்.

வீடுகளில் சிக்கித் தவித்த மக்களை டிராக்டர்கள், பொக்லைன் வாகனங்கள் மூலம் மீட்டு மேடான பகுதிக்கு கொண்டு வந்தனர். 200க் கும் மேற்பட்ட மக்கள் மீட்கப்பட்டனர். அவர்கள் தேனியில் ஒரு திருமண மண்டபத்தில் அமைக்கப்பட்ட முகாமில் தங்க வைக்கப்பட்டனர். மேலும் பலர் வீடுகளில் இருந்து வெளியேற மறுப்பு தெரிவித்து தங்களின் வீடுகளின் மேல் மாடி பகுதியில் தங்கினர்.

இந்த வெள்ளத்தை வேடிக்கை பார்க்கவும் மக்கள் பலர் அங்கு வந்தனர். இதனால் அங்கு பாதுகாப்பு பணியில் போலீசார் ஈடுபட்டனர். இரவு வரை தெருக்களில் வெள்ளம் ஓடிக் கொண்டிருந்தது. வெள்ள பாதிப்பு காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்த பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. தொடர்ந்து அந்த பகுதி முழுவதும் இருளில் மூழ்கியது.

# ஆணவப் படுகொலை தடுப்பு சட்டம் இயற்ற ஆணையம்: கி.வீரமணி வரவேற்பு



சென்னை, அக்.21

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழ்நாடு சட்டசபையில் 'திராவிட மாடல்' ஆட்சியின் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின், "ஆணவக் கொலைகளை தடுப்பதற்கான சட்டமொன்றை இயற்றிட, ஓய்வுபெற்ற நீதிபதி கே.என். பாஷா தலைமையில் ஒரு தனி ஆணையம் அமையும். அதன் வழிகாட்டுதலையொட்டி, அடுத்து ஆணவக் கொலை தடுப்புச் சட்டம் உருவாகும்" என்று விடுத்துள்ள இந்த அறிவிப்பு, இந்தியாவிற்கே வழி காட்டும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிரகடனம் ஆகும். சாதி ஒழிப்பு முயற்சிக்கான ஆணவப் படுகொலை தடுப்புச் சட்ட ஏற்பாட்டுக்கான முன்னெடுப்புக்கு எங்களது 'டபுள் சல்யூட்' வாழ்த்துகள்! இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் (22.10.2025)

மேஷம்: புதிய முயற்சிகள் வெற்றியடையும் நாள். நண்பர்களிடம் இருந்து ஆதரவு கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் சிறிய லாபம் உண்டு.

ரிஷபம்: உழைப்புக்குஏற்றபலன்கிடைக்கும் நாள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். செலவுகள்கட்டுப்பாட்டில் இருக்கும்.

மிதுனம்: சில எதிர்பாராத தடை ஏற்பட்டாலும் அதைக் கடந்து முன்னேறுவீர்கள். நண்பர்கள் உங்களை ஊக்குவிப்பர்.

கடகம்: வீட்டு வேலைகளில் அதிக ஈடுபாடு. உடல் சோர்வு இருந்தாலும் மனநிம்மதி உண்டு. புதிய உறவு உருவாக வாய்ப்பு.

சிம்மம்: தன்னம்பிக்கையுடன் செயல்படுங்கள், சாதனை உங்கள் பக்கம். அதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

கன்னி: நீண்டநாள் ஆசைகள் நிறைவேறும் நாள். சொத்து சம்பந்தமான விவகாரத்தில் நல்ல முடிவு.

துலாம்: புதிய வாய்ப்புகள் வரலாம். அதிர்ஷ்டம் உங்களுடன் இருக்கும். நண்பர்கள் நம்பிக்கையுடன் நடப்பர்.

விருச்சிகம்: உடல்நலம் கவனிக்க வேண்டிய நாள். உறவினர்களிடம் நிதானமாக பேசுங்கள். பொறுமைதேவை.

தனுசு: வெளிநாட்டுச் செய்தி உங்களை மகிழ்விக்கும். கல்வியில் முன்னேற்றம். தொழிலில் புதிய வாய்ப்பு.

மகரம்: அழுத்தமான பணி இருந்தாலும் மனநிம்மதி உண்டு. குடும்பத்தில் நல்ல செய்தி கேட்பீர்கள்.

கும்பம்: புதிய முயற்சி தொடங்க சிறந்த நாள். தொழிலில் முன்னேற்றம் உண்டு. எதிரிகள் விலகுவர்.

மீனம்: மன அமைதி பெறுவீர்கள். உறவினர்கள் மதிப்புடன் நடப்பர். நீண்டநாள் குழப்பம் தீரும்.

# முல்லைப்பெரியாறு அணை நீர்மட்டம் உயர்வு; கேரளாவுக்கு உபரிநீர் திறப்பு; வெள்ள அபாய எச்சரிக்கை

கூடலூர், அக்.21

தமிழககேரள எல்லையில் முல்லைப்பெரியாறு அணை அமைந்துள்ளது. தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்களின் நீராதாரமாக திகழும் இந்த அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் சில நாட்களாக மழை பெய்து வருகிறது.

11 மணியளவில் அணைக்கு நீர்வரத்து 40 ஆயிரத்து 773 கன அடியாக அதிகரித்தது. இதனால், கேரள மாநிலம் இடுக்கி மாவட்டத்தில் முல்லைப்பெரியாற்றின் கரையோர பகுதிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டது. அணையில் இருந்து தமிழக நீர்வளத்துறை அதிகாரிகள், கேரள நீர்வரத்துறை அதிகாரிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை தகவலை அனுப்பினர்.

அதிகாலை 3 மணியளவில் நீர்மட்டம் 136 அடியை கடந்தது. தொடர்ந்து நீர்வரத்து அதிக அளவில் இருந்ததால் காலை 6 மணியளவில் நீர்மட்டம் 137.80 அடியாக உயர்ந்தது. அப்போது நீர்வரத்து வினாடிக்கு 17 ஆயிரத்து 828 கன அடியாக இருந்தது. தொடர்ந்து காலை 9 மணியளவில் நீர்மட்டம் 138.45 அடியாக உயர்ந்தது.

வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டதை தொடர்ந்து காலை 9 மணியளவில் அணையில் உள்ள 13 மதகுகளில், 3 மதகுகள் திறக்கப்பட்டு கேரளாவுக்கு வினாடிக்கு 1,078 கன அடி உபரிநீர் வெளியேற்றப்பட்டது. தொடர்ந்து 11 மணியளவில் 8 மதகுகள் திறக்கப்பட்டு உபரிநீர் திறக்கும் அளவு 3,763 கன அடியாக அதிகரிக்கப்பட்டது.

தொடர்ந்து நீர்வரத்து அதிக அளவில் இருந்ததால் பகல் 1 மணியளவில் அணையில் உள்ள 13 மதகுகளும் தலா 1 மீட்டர் உயரத்துக்கு திறக்கப்பட்டது. அதன் மூலம் வினாடிக்கு 7,163 கன அடி வீதம் கேரளாவுக்கு உபரிநீர் வெளியேற்றப்பட்டது. அந்த உபரிநீர் வல்லக்கடவு, வண்டிப்பெரியாறு வழியாக இடுக்கி அணையை நோக்கி சென்றது. மாலையில் நீர்மட்டம் 139 அடியை எட்டியது.

இதன் மூலம் ஒரே நாளில் அணையின் நீர்மட்டம் 7 அடி உயர்ந்துள்ளது.

# 'தென் மாவட்டங்களில் பதற்றத்தை தணிக்கவே படம் எடுக்கிறேன்' மாரி செல்வராஜ்



நெல்லை உடையார்பட்டி ராம் சினிமாஸ் திரையரங்கில் ஓடிக்கொண்டிருக்கும் 'பைசன்' படத்தை ரசிகர்களுடன் சேர்ந்து இயக்குநர் மாரி செல்வராஜ், நடிகர் துருவ் விக்ரம், நடிகைகள் அனுபமா பரமேஸ்வரன், ரதிஷா விஜயன் உள்ளிட்டோர் கண்டுகளித்ததுடன் ரசிகர்களுடன் கலந்துரையாடினர்.

பின்னர் மாரி செல்வராஜ் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

'விளையாட்டு என்பது தனியானது கிடையாது, அது ஒரு சமூகம் சார்ந்த நிகழ்வாகவே உள்ளது. சாதியை படமாக நான் எடுக்கவில்லை, எனது வாழ்வில் கண்ட பிரச்சினைகள், வலியை படமாக எடுத்து இருக்கிறேன். சாதியை கடந்து வெளியே வந்துவிடலாம் என்பதற்காகவே இதுபோன்ற படங்கள் எடுக்கப்படுகிறது.

இதுவரை என்னால் எடுக்கப்பட்ட படங்களுக்கு தமிழக அரசு விருதுகள் வழங்கி வருகிறது. அதனால் 10 பேர் அமர்ந்து பேசுவதை எல்லாம் பெரிதாக எடுத்துக்கொள்ளக் கூடாது.

ஒவ்வொரு படத்துக்கும் எதிர்மறை கருத்துக்கள் வரத்தான் செய்யும், அதனை எதிர்த்து சாகும்வரை எனது பயணம் இருக்கும். தென் மாவட்டங்களில் உள்ள பதற்றத்தை மாற்றுவதற்காகத்தான் இதுபோன்ற படங்கள் எடுக்கப்பட்டு வருகிறது', என்றார்.

# 'ராம் சரண் மீது எனக்கு உண்மையிலேயே வருத்தம்' ராம் பொதினேனி



ராம் பொதினேனி தற்போது ஆந்திரா கிங் தாலுகா என்ற படத்தில் நடித்துள்ளார். பாக்யஸ்ரீ கதாநாயகியாக நடித்துள்ள இப்படம் நவம்பர் 28ம் தேதி வெளியாகிறது.

சமீபத்தில், ஜகபதி பாபுவின் ஜெயம்மு நிச்சயமு ரா நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக ராம் பொதினேனி கலந்து கொண்டார். அபோது ராம் சரண் மீது இருக்கும் சுமை பற்றி பேசினார்.

அவர் கூறுகையில், 'சிரஞ்சீவி மாதிரி ஒரு அப்பா எனக்கு இருந்திருக்கலாம் என்று ஆசைப்பட்டிருக்கிறேன். அது எனக்கு திரைத்துறையில் ஒரு பெரிய தளத்தை கொடுத்திருக்கும்.

ஆனால் பின்னர் புரிந்தது. ராம் சரண் மீது எனக்கு உண்மையிலேயே வருத்தமாக இருக்கிறது. நட்சத்திர வாரிசுகள் எவ்வளவு அழுத்தத்தில் இருக்கிறார்கள் என்பது யாருக்கும் தெரியாது' என்றார்.

# பெண்ணிடம் பாலியல் ரீதியாக பேசுவது போன்ற ஆடியோ...'தி கோட்' பட நடிகர் விளக்கம்



அஞ்சாதே, கோ, தி கோட் உள்ளிட்ட படங்களில் நடித்து பிரபலமானகேரளநடிகர்அஜ்மல்அமீர், பெண்ஒருவருடன் பாலியல் ரீதியாக பேசுவது போன்ற ஆடியோ ஒன்று வைரலாகி வருகிறது.

தமிழ் மற்றும் மலையாள படங்களில் நடித்து வருபவர் நடிகர்அஜ்மல்அமீர். தமிழில் 2005ஆம் ஆண்டு வெளியான பிப்ரவரி 1 படத்தின் மூலம் திரையுலகிற்கு அறிமுகமானார். பின்னர் அஞ்சாதே , விஜயின் தி கோட் , கோ உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார்.

தற்போது இவர் பெண்ணொருவரிடம் பாலியல் ரீதியாக பேசுவது போன்ற ஆடியோ கிளிப் சமூக வலைதளத்தில் வைரலாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், இதற்கு விளக்கம் அளித்து நடிகர் அஜ்மல் வீடியோ வெளியிட்டுள்ளார். அதில், 'இரண்டு நாட்களுக்கு முன்பு, என்னைப் பற்றி மிகவும் மோசமான செய்திகள் வெளிவந்தன. ஏஐ பயன்படுத்தி உருவாக்கப்பட்ட எந்தவொரு போலி கதையோ , குரலோ என்னையும் என் வாழ்க்கையையும் அழிக்க முடியாது. சமூக ஊடகங்களில் எனக்கு ஆதரவளித்த அனைவருக்கும் எனது நன்றியையும் அன்பையும் தெரிவித்துக் கொள்கிறேன்' இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

# நான் இன்னும் பொறுமையாக இருந்திருக்க வேண்டும் மந்தனா



13வது பெண்கள் உலக கோப்பை கிரிக்கெட் போட்டி இந்தியா மற்றும் இலங்கையில் நடந்து வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 8 அணிகளும் தங்களுக்குள் தலா ஒருமுறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் டாப் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெறும். இந்த நிலையில் மத்திய பிரதேச மாநிலம் இந்தூரில் நேற்று முன்தினம் அரங்கேறிய 20வது லீக் போட்டியில் இந்தியா இங்கிலாந்து அணிகள் மல்லுகட்டின. முதலில் பேட்டிங் செய்த இங்கிலாந்து அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 288 ரன்கள் எடுத்தது. அதிகபட்சமாக முன்னாள் கேப்டன் ஹீதர் நைட் 109 ரன்கள் அடித்தார். இதனை அடுத்து களமிறங்கிய இந்திய அணி நல்ல தொடக்கத்தை பெற்று அபாரமாக விளையாடி வந்தது. ஒரு கட்டத்தில் 30 பந்துகளில் 36 ரன்கள் அடிக்க வேண்டும். கைவசம் 6 விக்கெட்டுகள் இருந்த நிலையில் இந்தியாவின் வெற்றி உறுதி என்று ரசிகர்கள் எதிர்பார்த்தனர். ஆனால் மந்தனா ஆட்டமிழந்த பிறகு யாருமே நினைக்காத வகையில் ஆட்டம் தலைக்கீழாக மாறி இங்கிலாந்து அணி 4 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அத்துடன் இங்கிலாந்து அரைஇறுதிக்கும் தகுதி பெற்றது. இந்நிலையில் இந்த தோல்வி குறித்து துணை கேப்டன் ஸ்மிருதி மந்தனா கூறுகையில், "எங்களது ஷாட் தேர்வு இன்னும் சிறப்பாக இருந்திருக்கலாம். என்னிடம் இருந்துதான் சரிவு தொடங்கியது. நான் சரியான ஷாட்டை தேர்வு செய்து ஆடியிருக்க வேண்டும். பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன். எங்களுக்கு ஓவருக்கு 6 ரன்கள் மட்டுமே தேவைப்பட்டது. நான் ஆட்டத்தை இன்னும் ஆழமாக எடுத்து சென்றிருக்க வேண்டும்.

நான் இந்த இன்னிங்ஸ் முழுவதும் பொறுமையாக விளையாட வேண்டும், பந்தை தூக்கி அடிக்கக்கூடாது என்று எனக்குள் சொல்லிக் கொண்டேன். ஆனால் நான் அடித்த தவறான ஷாட் மொத்தத்தையும் மாற்றிவிட்டது. கவர் திசைக்கு மேலே பந்தை தூக்கி அடிக்க முயற்சித்தேன். ஆனால் சரியாக கிளிக் ஆகவில்லை. நான் இன்னும் பொறுமையாக இருந்திருக்க வேண்டும்" என்று கூறினார்.

# மகளிர் உலகக்கோப்பை: வங்காளதேசத்தை வீழ்த்தி இலங்கை அசத்தல்




13வது மகளிர் உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் இந்தியா மற்றும் இலங்கையில் நடந்து வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 8 அணிகளும் தங்களுக்குள் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும். ஏற்கனவே ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, தென்னாப்பிரிக்கா ஆகிய 3 அணிகள் அரையிறுதி சுற்றுக்கு தகுதிபெற்றுவிட்டன.

இந்நிலையில், மகளிர் உலகக்கோப்பையில் இன்று நடைபெற்ற 21வது லீக் ஆட்டத்தில் இலங்கை வங்காளதேசம் அணிகள் மோதின. நவி மும்பையில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் டாஸ் வென்ற இலங்கை முதலில் பேட்டிங்கை தேர்வு செய்தது. அதன்படி முதலில் பேட்டிங் செய்த இலங்கை 48.4 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 202 ரன்கள் அடித்தது. அதிகபட்சமாக ஹாசினி பெரேரா 85 ரன்கள் அடித்தார். வங்காளதேச தரப்பில் அந்த அணியின் ஷர்னோ அக்தர் அதிகபட்சமாக 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதையடுத்து 203 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய வங்காளதேச அணி ஆரம்பம் முதலே இலங்கை பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் விக்கெட்டுகளை தாரைவார்த்தது. இருப்பினும் ஷார்மின் அக்தர் நிகார் சுல்தானா இணை சிறப்பாக ஆடி வங்காளதேச அணிக்கு நம்பிக்கையை அளித்தது. அனால் அவர்கள் ஆட்டமிழந்ததும் வங்காளதேசம் தோல்வியின் பிடியில் சிக்கியது. 50 ஓவர்கள் விளையாடிய வங்காளதேச அணியால் 9 விக்கெட்டுகளை இழந்து 195 ரன்கள் மட்டுமே அடிக்க முடிந்தது. இதன் மூலம் இலங்கை 7 ரன்கள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றது. வங்காளதேசம் தரப்பில் நிகார் சுல்தானா 77 ரன்களும், ஷார்மின் அக்தர் 64 ரன்களும் அடித்தனர். இலங்கை தரப்பில் அத்தபத்து 4 விக்கெட்டுகள் வீழ்த்தினார். இலங்கை வீராங்கனை ஹாசினி ஆட்ட நாயகியாக தேர்வு செய்யப்பட்டார்

# தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான 2வது டெஸ்ட்: முதல் நாளில் பாக். 259 ரன்கள்

பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென் ஆப்பிரிக்க கிரிக்கெட் அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் லாகூரில் நடந்த முதலாவது டெஸ்டில் பாகிஸ்தான் 93 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரில் 10 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இந்த நிலையில் இவ்விரு அணிகள் இடையிலான 2வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி ராவல்பிண்டியில் இன்று தொடங்கியது. இதில் டாஸ் வென்ற பாகிஸ்தான் அணியின் கேப்டன் ஷான் மசூத் முதலில் பேட்டிங் செய்வதாக அறிவித்தார்.

அதன்படி முதல் இன்னிங்சை தொடங்கிய பாகிஸ்தான் அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக அப்துல்லா ஷபிக் இமாம் உல் ஹக் களமிறங்கினர். இவர்களில் இமாம் 17 ரன்களில் ஆட்டமிழந்தார். அடுத்து ஷபிக் உடன் கேப்டன் ஷான் மசூத் கை கோர்த்தார். இருவரும் சிறப்பாக விளையாடி அணியை முன்னெடுத்து சென்றனர்.

சிறப்பாக விளையாடிய ஷபிக் 57 ரன்களிலும், மசூத் 87 ரன்களிலும் ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த பாபர் அசாம் 16 ரன்களில் நடையை கட்டினார். பின்னர் களமிறங்கிய சாத் ஷகீல் நிலைத்து விளையாட ரிஸ்வான் 19 ரன்களில் அவுட் ஆனார்.

முதல் நாள் முடிவில் பாகிஸ்தான் 5 விக்கெட்டுகளை இழந்து 259 ரன்கள் அடித்துள்ளது. சாத் ஷகீல் 42 ரன்களுடனும், சல்மான் ஆகா 10 ரன்களுடனும் களத்தில் உள்ளனர். தென் ஆப்பிரிக்கா தரப்பில் மகராஜ் மற்றும் ஹார்மர் தலா 2 விக்கெட்டுகள் வீழ்த்தி உள்ளனர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, Kil-paukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.